# <u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.</u>

## <u>OS.No.40/2015</u>

2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் 09-ம் நாள் திங்கட்கிழமை **வா.சா.1**-ன் வாக்கு மூலம் (1969-ம் ஆண்டு 54-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) மொழிப்பெயர்ப்பாளர் திரு.எஸ்.சுரேஷ்குமார் என்பவரால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | நாகேந்திரன் | **வட்டம்** | சிங்கம்புணரி |
| **த.பெ** | பிச்சை | **சமயம்** | இந்து |
| **கிராமம்** | சிங்கம்புணரி | **வயது** | 64/2023 |

முதல் விசாரணை:

நான் வாதி ஆவேன். நான் நிருபணவாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விபரங்களை நான் தான் வழக்கறிஞரிடம் தெரிவித்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். 07.01.2004ல் சுந்தரம் செட்டியார் அவருடைய வாரிசுகள் ராஜேந்திரன், கோவிந்தராஜ், வரதராஜன், சந்தானலெட்சுமி, ஜெயலெட்சுமி, கலா, மீனாள் ஆகியோர்களுக்கு எழுதிக் கொடுத்த உயில் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி உயில் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுந்தரம் செட்டியாரின் இறப்பு சான்றிதழ் அசல் தாக்கல் செய்கிறேன். மேற்படி இறப்புச் சான்றிதழ் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.11.2009ல் எனக்கு கலா, மீனாள் ஆகியோர் எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரம் அசல் தாக்கல் செய்கிறேன். மேற்படி கிரையப் பத்திரம் அசல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருப்பத்தூர் டி.மு.கோர்ட் மு.வ.எண்.158/2009 தற்போது சிவகங்கை கூடுதல் மாவட்ட நீதிமன்றம் மு.வ.எண்.64/2020 வாதி தாக்கல் செய்த வழக்குரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி வழக்குரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருப்பத்தூர் டி.மு.கோர்ட் மு.வ.எண்.158/2009 தற்போது சிவகங்கை கூடுதல் மாவட்ட நீதிமன்றம் மு.வ.எண்.64/2020ல் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி எதிர்வழக்குரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 26.09.2020ல் திருப்பத்தூர் டி.மு.கோர்ட் மு.வ.எண்.143/2010 தற்போது சிங்கம்புணரி டி.மு.கோர்ட் மு.வ.எண்.21/2020ல் வழக்குரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். மேற்படி வழக்குரை சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 12.07.2015ல் மாவட்ட பதிவாளர் பதிவு சட்டம் பிரிவு 72ன் கீழ் பிறப்பித்த உத்தரவு அசல் தாக்கல் செய்கிறேன். மேற்படி உத்தரவு அசல் **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

வாதி தரப்பு ஆவணங்கள் தாக்கல் செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.